## திருப்பரங்குன்றத்தில் – பா.ஜ.க. அரங்கேற்றியுள்ள பிளவுவாத சதித் திட்டத்தை முறியடித்து

# மதச்சார்பின்மை - மக்கள் ஒற்றுமையைக் காப்போம்!

## ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டறிக்கை!

**சென்னை, பிப். 11 –**

**“மக்களை மதரீதியாக பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கும் பா.ஜ.க. வின் சதித் திட்டத்தை முறியடித்து மக்கள் ஒற்றுமையைக் காப்பதில் உறுதியுடன் செயல்படுவோம்” என்று ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

**இது குறித்து தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் ஆர்.முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே.எம்.காதர்மொகிதீன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், மக்கள் நீதி மய்யம் பொதுச் செயலாளர் அருணாசலம், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி.வேல்முருகன் ஆகியோர் கூட்டாக அறிக்கை விடுத்துள்ளனர்.**

‘இந்தியா’ கூட்டணி கட்சியினர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவின் பன்மைத்துவத்திற்கும், மத நல்லிணக்கத்திற்கும் சிறந்ததோர் எடுத்துக்காட்டுகளில் ஒன்று தமிழ்நாடாகும். தமிழ்நாட்டின் ஆன்மிகத் தலங்களான பழனியாண்டவர் கோவில், மதுரை மீனாட்சியம்மன் கோவில் உள்ளிட்ட இந்து மத திருத்தலங்கள், அன்னை வேளாங்கண்ணி ஆலயம், நாகூர் தர்கா, ஏர்வாடி தர்கா போன்ற அனைத்து வழிபாட்டுத் தளங்களிலும் மத வேறுபாடு இன்றி பொதுமக்கள் வழிபடுவதே இதற்கு சான்று.

இத்தகைய தமிழ்நாட்டில் மத வேறுபாடுகளை விதைத்து மக்களைப் பிரித்து அரசியல் ஆதாயம் தேடுவதற்கு சில அமைப்புகள் தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

மக்களை மத ரீதியாக பிளவுபடுத்தி அதில் அரசியல் ஆதாயம் தேடுவதை பாஜகவும் அதன் துணை அமைப்புகளான ஆர்.எஸ்.எஸ், விஸ்வ இந்து பரிஷத் உள்ளிட்ட வலதுசாரி அமைப்புகள் திட்டமிட்டு செய்து வருவது வழக்கமாகி இருக்கிறது. பாபர் மசூதி, அஜ்மீர் தர்கா என வரிசையாக இத்தகைய பிளவுவாத அரசியலைச் செய்து வருகின்றனர். அவர்களின் அடுத்த குறி தமிழ்நாடாக இருக்கிறது.

**பிளவுவாத அரசியலை தொடங்கியுள்ளனர்!**

தமிழ்நாட்டிலும் கடந்த அதிமுக ஆட்சிக்காலத்தில் சிறு சிறு வலது சாரி அமைப்புகள் பாஜகவின் ஆதரவில் முளைவிட்டு வளரத் தொடங்கியிருந்தன. கடந்த மூன்றாண்டுகளாக அடங்கியிருந்தவர்கள் தேர்தலை கவனத்தில் கொண்டு தங்களின் பிளவுவாத அரசியலை தொடங்கியிருக்கின்றனர். பாரதிய ஜனதாவின் தேர்தல் அறுவடைக்காக தமிழ்நாட்டின் ஒற்றுமையை சீர்குலைத்திட திட்டமிட்டு சதிகளை அரங்கேற்றி வருகின்றன.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒன்றிய அரசை நடத்துகிற வாய்ப்பு கிடைத்தும் கூட பாஜக தமிழ்நாட்டின் நலன்களுக்கான நடவடிக்கை எதையும் சொல்லிக் கொள்ளும்படியாக செய்திடவில்லை என்பதை தமிழ்நாடு அறியும். 2025 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் கூட தமிழ்நாட்டின் ரயில்வே மேம்பாட்டிற்கோ, கோவை மதுரை புதிய மெட்ரோ ரயில் திட்ட அறிவிப்போ, தமிழகத்திற்கு உரிய நிதி பங்கீடோ, பேரிடர் கால பாதிப்பு நிதியோ அல்லது மாநிலத்தின் தொழில், வர்த்தக, வேளாண் வளர்ச்சிக்கோ ஒரு சிறு துரும்பையும் கூட கிள்ளிப் போடவில்லை இந்த பா.ஜ.க.\

**தமிழ்நாட்டிற்கு தொடர்ந்து வஞ்சனை!**

சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி, விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் டெல்டா மாவட்டங்கள் தொடர்ச்சியாக அடுத்தடுத்து வெள்ளப் பெருக்கினாலும், பெரும் புயல்களாலும் தாக்கப்பட்டு, மக்கள் சொல்லொணா துயரங்களை எதிர்கொண்ட போதும் தமிழ்நாடு அரசு கோரிய நிதியை ஒதுக்காமல் தமிழ்நாட்டின் மீது வஞ்சனையோடு செயல்படுகிறது பா.ஜ.க. எனவே, தமிழ்நாட்டு மக்கள் தொடர்ந்து இவர்களைப் புறக்கணித்து வருகின்றனர்.

இந்நிலையில், மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தை மையப்படுத்தி தற்போது தனது அடுத்தகட்ட மதவெறித் திட்டத்தை பாஜகவும், அதன் சங் பரிவார அமைப்புகளும் அரங்கேற்றியுள்ளன. மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றாக இருக்கிறது. திருப்பரங்குன்றம் மலைஅடிவாரத்தில் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலும், மலையின் தென்புறம் காசி விஸ்வநாதர் கோவிலும், கீழ்புறம் உச்சிப்பிள்ளையார் கோவிலும் அமைந்துள்ளன.

**திருப்பரங்குன்றம் தர்க்காவில் வழிபாடு!**

2000 ஆண்டுகளுக்கு முன்பாக சமணம் இருந்திருக்கிறது. திருப்பரங்குன்றம் மலையின் ஒரு பகுதியில் சிக்கந்தர் பாதுஷா அவுலியா தர்க்கா அமைந்துள்ளது. இங்கு நீண்ட காலமாக மக்கள் எவ்வித பிரச்சனையுமின்றி வழிபாடு செய்து வருகின்றனர்.

நேர்மையும், அறவுணர்வும் கொண்ட நமது முன்னோர்கள் காலத்தில் இருந்தே சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் பூசைகளும், சிக்கந்தர் தர்காவில் அவ்வப்போது நேர்த்திக்கடன் செலுத்துவதற்காக ஆடு, கோழிகளை காணிக்கையாக செலுத்தி அன்னதானம் (கந்தூரி) செய்வதும் வழக்கமாக இருந்துள்ளது. இஸ்லாமியர்கள் மட்டுமின்றி இந்துக்களும் தர்க்காவிற்கு சென்று நேர்த்திக்கடன் நிறைவேற்றி வருகின்றனர்.

மேற்கண்ட வழிபாட்டு முறைகள் குறித்து உண்மைக்கு மாறான செய்திகளை பரப்பி மக்கள் மத்தியில் பதற்றத்தை பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ். இந்துத்துவா அமைப்புகள் ஏற்படுத்தி வருகின்றன. திருப்பரங்குன்றத்தில் இருக்கிற சுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பொய் செய்திகளைப் பரப்பி பிப்ரவரி 4ம் தேதி திருப்பரங்குன்றத்தில் கூடுமாறு அழைப்பு விடுத்தது. சமூக வலைதளங்களில் மதவெறிப் பிரச்சாரங்களில் ஈடுபட்டது.

**பிளவுவாதக் கூட்டம்!**

இந்நிலையில் திருப்பரங்குன்றத்தில் உள்ள அனைத்து கட்சி தலைவர்களும் ஒன்றிணைந்து பதற்றத்தை உருவாக்க முனைந்துள்ள மதவெறி சக்திகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியரிடம் வலியுறுத்தினர். மாவட்ட நிர்வாகமும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொண்டன.

அதே நேரத்தில் தமிழ்நாட்டு மக்கள் இவ்வமைப்புகளின் பொய்யையும், புரட்டையும் நம்பவில்லை; முற்றிலுமாக புறக்கணித்துள்ளனர். எனினும், அங்கு கூடிய மதவெறி அமைப்பினர் இந்திய அரசமைப்பு சட்டத்திற்கு விரோதமாகவும் வெறியூட்டக்கூடிய விதத்திலும் பேசி தங்களது பிளவுவாதத் திட்டத்தை பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

**மதுரை மக்களுக்கு பாராட்டு!**

மேலும், தமிழ்நாட்டின் பொது அமைதியையும், ஒற்றுமையையும் உயர்த்திப்பிடித்த திருப்பரங்குன்றம் உள்ளிட்டு மதுரை மக்களுக்கும், மதச்சார்பற்ற அனைத்து அரசியல் கட்சிகளுக்கும், அமைப்புகளுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மிகப்பழமையான நகரமான மதுரை எப்போதும் மதநல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது. மதுரை மக்கள் அனைத்து மத நம்பிக்கைகளை மதித்தும், அனைத்து மத விழாக்களிலும் பங்கேற்று வருகின்றனர்.

மதவெறி சக்திகளின் சூழ்ச்சிகளை முறியடித்து மக்கள் ஒற்றுமையையும், அனைத்து பகுதி மக்களின் வழிபாட்டு உரிமையையும் பாதுகாக்க திருப்பரங்குன்றத்தின் அனைத்துப் பகுதி மக்களும் இப்போதுபோல் எப்போதும் உறுதிகாட்ட வேண்டும் எனவும், தமிழ்நாடு இத்தகைய மதவெறி அமைப்புகளை முழுமையாக புறக்கணித்திட வேண்டும் எனவும் அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

அனைத்து மதச்சார்பற்ற கட்சிகளும் மதச்சார்பின்மை மற்றும் மக்கள் ஒற்றுமை காப்பதில் உறுதியுடன் செயல்பட்டு அனைத்து மக்களின் வழிபாட்டு உரிமையை பாதுகாப்போம் என்று உறுதி கூறுகிறோம்.

இவ்வாறு அவர்கள் அந்தக் கூட்டறிக்கையில் கூறியுள்ளனர்.

## தேர்தல் அறிவிப்பில் கூறியபடி விவசாயிகளின் பயிர்க் கடன் ரூ.12,110 கோடி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது!

# அவதூறு பரப்பும் அண்ணாமலை விவசாய அரசியல் செய்ய வேண்டாம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கண்டன அறிக்கை!

**சென்னை, பிப்.11-**

**அவதூறு பரப்பும் அண்ணாமலை விவசாய அரசியல் செய்ய வேண்டாம் என அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தேர்தல் அறிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் கழகத் தலைவராக அண்ணன் தளபதி அவர்கள் தலைமையில் கொடுக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை அண்ணாமலை நினைவூட்டி எண். 33வது வாக்குறுதி என்று குறிப்பிட்டு அந்த வாக்குறுதி இன்னும் நிறை வேற்றப்பட வில்லை, விவசாயிகளை ஏமாற்றுகின்ற ஒரு அரசாக முதலமைச்சர் இருக்கின்றார் என்று அபாண்டமான ஒரு குற்றச்சாட்டை அவர் சுமத்தினார். துறை அமைச்சர் என்ற முறையில் நானும் அதற்கு உரிய விளக்கத்தை முறையாக அறிக்கையின் வாயிலாக தெரிவித்திருந்தேன். அறிக்கையை படித்த பிறகு அவருக்கு நான் புரிந்திருக்கும் என்று தான் நான் நம்பினேன். ஆனால், அதை இன்னும் புரியாததை போல் விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி செய்யமால் ஏமாற்றி விட்டார் என்று விவசாயிகள் மீது இரக்கம் காட்டுகின்ற வகையில் அவர் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.



கொடுத்த வாக்குறுதியை நாங்கள் மறுக்கவில்லை. அவர் குறிப்பிட்டதை போல தேர்தல் அறிக்கையின் அறிவிக்கை எண்.33ன் படி நான் அதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா, இல்லையா என்பதை அவருக்கு நேரடியாக தெரியவில்லை என்றாலும் தெரிந்தவரிடத்தில் கேட்டு தெரிந்துக்கொண்டு கூட ஒரு மறுப்பறிக்கையாக கொடுத்திருக்காலம். எதிர் கட்சியாக இருப்பவர்கள் கேள்வி கேட்பதில் எங்களுக்கு எந்த விதமான தயக்கமும் இல்லை. ஆனால், அந்த கேள்விகளுக்கு நாங்கள் சொல்லுகின்ற பதிலை அது சரியானதாக இருந்தாலும் நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று சொல்வது இது எந்த வகையில் நியாயம் என்பதை கேள்வியாகதான் நான் கேட்க விரும்பிகி றேன்.

அவர் ஒரு வாக்குறுதியை சொல்லுகிறார், அதை நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறோம். அதற்காக எவ்வளவு தொகை, எவ்வளவு பயனாளிகள் விவசாயிகள் பயன் பெற்றார்கள் என்று நாங்கள் புள்ளி விவரங்களை சொன்ன பிறகும் மீண்டும் அதை சொல்லுவதில் எந்திவிதத்தில் நியாயம்.

முயலுக்கு மூன்று கால் என்று கிராமத்தில் ஒரு பழமொழி சொல்லுவார்கள் நாங்கள் நான்கு கால்கள் தான் முயலுக்கு என்று சொல்லுறோம். இல்லை, இல்லை மூன்று கால்கள் தான் என அவர் சொல்லுகிறார். இது இப்படியே தொடர்ந்து நீடிப்பது நல்லதாக தெரியவில்லை. திமுகவை பொறுத்தவரையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு பெறும்பாலான வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருகிறது.

அப்படி நிறைவேற்றப்பட்ட வாக்குறுதிகளில் தேர்தல் அறிவிப்பில் 33வது வரிசை எண் என்று குறிப்பிட்டிருக்கிராறே அதுவும் விவசாயிகளுக்கு நிறைவேற்றப்பட்டிருகிறது. குறிப்பாக, பயிர்கடன் ரூ.12, 110 கோடி மதிப்பில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, 5 பவுன் அளவிற்கும் கீழ் கூட்டுறவு வங்கியில் நகை அடகு வைத்தவர்களுக்கு ரூ.5013 கோடி நகை கடன் தள்ளுபடி செய்து உரியவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது. மேலும், மகளிர் சுய உதவிக்குழுகளை சார்ந்த சகோதரிகள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற ரூ.2755 கோடி அளவிலான கடன்களை தள்ளுபடி செய்யப்பட்டது.

இவை அனைத்தும் மொத்தமாக ரூ.19,878 கோடி அளவிலான கடன்கள் 45,09,640 எண்ணிக்னையிலான பயனாளிகளுக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அனைத்தும் தேர்தல் காலத்திலேயே வாக்குறுதிகளாக கொடுக்கப்பட்டு முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு தளபதியுடைய அரசு நிறைவேற்றி இருக்கிறது.

ஆட்சி பொறுப்பேற்று இன்று நான்காவது ஆண்டை நோக்கி செல்லும் இந்த வேலையில் இம்மாதிரியான கருத்தினை தெரிவித்துள்ளார். நான்கு வருடங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட, தள்ளுபடி செய்யப்ப ட்ட பயிர்கடன்களை இல்லை என்று இப்பொழுது மறுப்பது எந்த வகையில் நியாயம்.

அண்ணாமலையைப் பொறுத்தவரையில் அவர் பகலில் ஒரு அறிக்கை கொடுக்கிறார், அந்த கேள்விக்கான விளக்கத்தை நான் தெரிந்துகொண்டு உரிய பதிலை தெரிவித்த பிறகு நள்ளிரவில் அறிக்கை கொடுத்திருக்கிறார் என்று சொல்லுகிறார். பொது வாழ்கையில் இருக்க கூடிய எல்லோருக்கும் இரவு, பகல் ஒன்றுதான்.

அது முறையாக என்னுடைய கவனத்திற்கு வரும், வந்த பிறகு அது சம்மதமாக நான் ஆய்வுகளை செய்து தான் அறிக்கை வெளியிட முடியுமே தவிர அவர் எப்பொழுது அறிக்கை கொடுப்பார் என்று எதிர்பார்த்துக் கொண்டு அடுத்த நிமிடமே நானும் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்பது ஏற்புடையதல்ல.

நான் மீண்டும் அவருக்கு கேட்கிறேன், நான் கேட்ட கேள்விக்கு பதில் வரவில்லை. நாங்கள் நிறைவேற்றிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று சொல்கிறார். ஆனால், அதே நேரத்தில் நான் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கவில்லை. குறிப்பாக ஒன்றிய அரசு சார்பில் மாநிலங்களில் ஏற்படக்கூடிய பேரிடர் மேலாண்மைக்காக ரூ.36,000 கோடி கோரப்பட்டது. ஆனால், ஒன்றிய அரசிடமிருந்து பெற்றத் தொகை ரூ.260 கோடி மட்டுமே ஆகும். இதை முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசிற்கு நினைவூட்டி, கடிதம் அனுப்பியும் எந்திவித நடவடிக்கைகளையும் தமிழ்நாடு மக்களுக்கு மேற்கொள்வி ல்லை. இதையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் நலனில் உண்மையான அக்கறை அண்ணாமலைக்கு இருக்குமேயானால் இவருடைய செல்வாக்கு அங்கே ஒன்றிய அரசிடமும், பிரதமர் இடத்திலும் அந்த உதவிகளையெல்லாம் கேட்டு பெற்றுத் தந்தால் அது தமிழ்நாட்டு மக்களுக்கு பாரதிய ஜனதா கட்சி செய்கின்ற நல்ல காரியமாக இருக்கும்.

கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் நிறைவே ற்றாமல் விட்டுவிட்டு கொடுக்க வேண்டிய நிதிகளையும் கொடுக்க மறுத்துக் கொண்டிருக்கின்ற கட்சியை சார்ந்தவர் இந்த கேள்வியை எழுப்புவது எந்த வகையில் நியாயம்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தொழிலாளர் விரோத சட்டத் தொகுப்புகளை திரும்பப் பெற கோரியும், மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத பட்ஜெட்டைக் கண்டித்தும் புதுக்கோட்டை தலைமை தபால் நிலையம் முன்பு தொ.மு.ச. மாவட்டத் தலைவர் அ.ரத்தினம் தலைமையில் பட்ஜெட் நகல் கிழிப்பு போராட்டம் நடைபெற்றது. நிகழ்வில் சி.ஐ.டி.யூ. மாநிலச் செயலாளர் ஏ.ஸ்ரீதர், தொ.மு.ச. பேரவை செயலாளர் எம்.வேலுச்சாமி, ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்டச் செயலாளர் ப.ஜீவானந்தம், தொ.மு.ச. மாவட்டப் பொருளாளர் எஸ். மணிமொழியன், சி.ஐ.டி.யூ. மாவட்டத் தலைவர் க.முகமதலி ஜின்னா, ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்டத் தலைவர் அரசப்பன், தொ.மு.ச. மாவட்ட துணைச் செயலாளர் எம்.நாகராஜன் மற்றும் மலர் கலந்து கொண்டனர்.

## ‘வாட்ஸ் அப்’ பில் வலம் வருவது!

